**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC –184/2016 |
| Prosecution Witness | : | PW-9 |
| Name | : | **திருமதி.லட்சுமி லதா** |
| Father's / Husband Name | : | **ராஜ்குமார்** |
| Address | : | **ஊரக காவல் நிலையம், விருதுநகர்<br>காவல் ஆய்வாளர்** |
| Age | : | 49/2026 |

**தேதி : 08.07.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி. ரசிகா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது._**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் ஊரக காவல் நிலையத்தில் காவல் ஆய்வளராக பணி செய்து வருகிறேன். கடந்த 25.10.2015–ம் தேதியன்று பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வளராக பணியில் இருந்தேன். மேற்படி காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வளராக 30.06.2015–ம் திரு. அப்துல் ரகுமான் என்பவர் பணியில்இருந்தபோது பிரதீப் என்பவரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வந்த புகாரினை பெற்று மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.6/2015 இ.த.ச பிரிவு 468, 420, 506(1) வழக்கு பதிவு செய்து மேற்படி காவல் ஆய்வளரால் சாட்சிகள் விசாரணை செய்து வைக்கப்பெற்றிருந்த கோப்பினை பெற்று நான் சாட்சிகள் சாந்தகுமார், சிலம்பரசம் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்தபோது கடந்த 25.03.2015–ம் தேதியன்று எதிரி

வாதிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்து வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். பின்னர் நீடாமங்களம் இந்தியன் வங்கி  கிளை மேலாளர் அவர்களை விசாரித்தபோது எதிரியின் வங்கிகணக்கு எண். 831307186–ன் வரவு செலவு கணக்குகள் குறித்த Statement பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். மற்ற சாட்சிகள் பிரதீப், சுப்ரமணியன், பூபாலன் ஆகியோரை பொறுப்பு காவல்ஆய்வாளர்  வாக்கு மூலம் விசாரணை செய்து பதிவு செய்து வைத்திருந்தார். காவல் ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை  பரீசிலனை செய்த வகையில் எதிரியின் செய்கையானது இ.த.ச. பிரிவு 468, 420, 506(1) குற்றமென குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.1 ஐ நான் தான் தாக்கல் செய்தேன். அ.த.சா.ஆ.1 ல் போலி வீசா மற்றும் போலி டிக்கெட் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.  அ.த.சா.ஆ.1  பதிவு செய்யப்படாத ஆவணம் ஆகும். நோட்டரி பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.  இந்த ஆவணம் வரைந்தவர் யார் என்ற விவரம் பத்திரத்தில் இல்லை. இந்த பத்திரத்தை வாங்கியது எதிரியா புகார்தாரரா என்று எனக்கு தெரியாது. வாதி வாங்கியதாக பத்திரத்தில் அவருடைய பெயர் இருக்கிறது.  அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கைக்கு பின்பு உள்ள Statement இல்லை அதற்கு முந்தைய காலக்கட்டத்திற்கான Statement ஆகும்.  எதிரி வங்கி கணக்கில் வாதி பணம் போட்டதாக வாதி கூறி உள்ளார். எவ்வளவு பணம் என்றால் ரூ.1 லட்சம்.

மீதி பணத்தை எந்த தேதியில் வாதி கொடுத்தார் என்று தேதி குறிப்பிட்டு கூறவில்லை.  புகார்தாரரின் உறவினர்கள் மட்டும்தான் விசாரித்துள்ளேனா என்றால் இல்லை தனநபர் சாட்சியும் விசாரித்து உள்ளேன்.  பிரதீப் உடைய

தகப்பனார் பெயர் சுப்ரமணியன் அவரும் இந்த வழக்கு சாட்சியாக உள்ளார். சரவணன் பிரதீப் உடைய மாமா. பூபாலன் பிரதீப் உடைய நெருங்கிய நண்பர் என்றால் சரியல்ல பிரதீப் உடைய நண்பர் ராஜேந்திரன் உடைய மகன் தான் பூபாலன். நான் சாந்தகுமாரை விசாரித்த தேதி 25.10.2015. அவருடைய வாக்குமூலத்தில் இருக்கும் கையெழுத்து என்னுடையதுதான். அவரை நான் விசாரிக்கும்போது போலி விசா போலி டிக்கெட் என்று குறிப்பிட்டு கூறியுள்ளரா என்றால் இல்லை. பிரதீப்க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று கூறவில்லை. சிலம்பரசனை நான் விசாரித்த தேதி 25.10.2015. நான் பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவில் வைத்துதான் விசாரித்தேன். போலி விசா போலி டிக்கெட் என்று விசாரணையின் போது குறிப்பிட்டு இவரும் கூறவில்லை மற்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் கூறவில்லை.

சிலம்பரசன் விசாரிக்கப்படவில்லை என்று அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுத்துள்ளார் என்றும், நான் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. உரிமையியல் சம்பந்தமான வழக்கு என்றும், உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது என்று நான் என்னுடைய வழக்கு கோப்பு பதிவு செய்யவில்லை. 6 மாதத்தில் பணம் தந்துவிடுகிறேன் என்றும், தரவில்லை என்றால் என்று கூறுவது மோசடி வழக்கு ஆகாது என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்கு தான் போடவேண்டும் என்றும், ஒப்பந்ததை மீறுவதற்கு குற்றவியல் வழக்கு போடக்கூடாது என்றால் சரியல்ல.

கொலை மிரட்டலுக்கான சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. வாதியை மட்டும்தான் விசாரணை செய்தேன்.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur

Judicial Magistrate No.1
Perambalur.